
## திராவிடத்தால் வாழ்கிறோம்

769

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

## தமிழ்நாட்டின் பிரதிநிதித்துவம் குறையக்கூடாது!

'நீட்', 'புதிய கல்விக்கொள்கை', 'மும்மொழிக் கொள்கை' என ஒன்றிய பா.ஜ.க. அரசின் திட்டங்களை இந்திய ஒன்றியத்தில் மற்றெந்த மாநிலங்களும் புரிந்து கொள்வதற்கு முன்பே, தமிழ்நாடு அதன் ஆபத்தை உணர்ந்துகொண்டு அம்பலப்படுத்தத் தொடங்கிவிட்டது. அதன்பிறகே, இந்தியாவில் மற்ற மாநிலங்களும் இதன் ஆபத்தை உணர்ந்துகொள்ளத் தொடங்கியுள்ளன. அந்தவகையில், தற்போது மக்களவைத் தொகுதி மறுசீரமைப்பினால் தென்மாநிலங்கள் சந்திக்கப்போகும் ஆபத்துகள் குறித்து, தமிழ்நாடு அரசு மிகப்பெரிய அபாய எச்சரிக்கையை வெளிப்படுத்தியிருக்கிறது.

இதுதொடர்பாக, மூத்த பத்திரிகையாளர் ஆர்.விஜயசங்கர் தொலைக்காட்சி ஊடகம் ஒன்றிற்கு அளித்துள்ள நேர்காணலில் தெளிவாக விளக்கியுள்ளார். அவரது கருத்தின் சுருக்கம்: "கடைசியாக 1971-இல் தொகுதி மறுசீரமைப்பு செய்யப்பட்டபோது தமிழ்நாட்டின் மக்கள்தொகை 4 கோடிக்கு மேல். உ.பி.யின் மக்கள்தொகை 8 கோடிக்கு மேல். இதுபோன்ற சீரற்ற மக்கள்தொகைப் பெருக்கத்தால் நாடாளுமன்றச் சமநிலை குலையும் எனக் கருதிய இந்திரா காந்தி, 1976-இல் மறுசீரமைப்பு முடிவை 25 ஆண்டுகளுக்கு நிறுத்திவைத்து, மக்கள்தொகைக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்தினார். ஆனால், சில மாநிலங்கள் சிறப்பாகச் செயல்பட்டு, சில மாநிலங்கள் செயல்பாடற்ற நிலையில் இருந்ததால், 2001-இல் வாஜ்பாய் அரசு மீண்டும் இந்த முடிவை 2026 வரை ஒத்திவைத்தது.

ஆகவேதான், இப்போது தொகுதி மறுசீரமைப்புப் பிரச்சினை உருவெடுத்துள்ளது. ஆனால், இப்போது தமிழ்நாட்டின் மக்கள்தொகை 7.21 கோடி (2011 கணக்குப்படி). உ.பி.யின் மக்கள்தொகை 19 கோடி. ஒட்டுமொத்தமாகவே தென்மாநிலங்கள் மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தியுள்ளன. ஆனால், பீகார், ம.பி., ராஜஸ்தான், உ.பி. மாநிலங்கள் தவறிவிட்டன. அதனால், மக்களவைத் தொகுதிகள் வடமாநிலங்களில் அதிகரிக்கும். தென்மாநிலங்கள் தண்டிக்கப்படும்.

தொகுதிகளை அதிகரிக்காமல், எல்லைகளை மறுவரையறை செய்தாலும் பாதிப்பு தென்மாநிலங்களுக்குத்தான். ஆகவே, மக்களவை உறுப்பினர்களின் தமிழ்நாட்டுக்கான பிரதிநிதித்துவமான 7.2% குறையாமல் சீரமைப்பு செய்ய வேண்டும். அனைத்துக் கட்சிகளையும் அழைத்துப் பேச வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



### மயிலை இடைத்தேர்தலுக்கு அழைப்பு!



மு.பன்னீர்செல்வம்

1994-ஆம் ஆண்டு மயிலாப்பூர் இடைத்தேர்தல் பிரச்சாரத்திற்கு, அன்றைய இளைஞர் அணிச் செயலாளர், இன்றைய கழகத் தலைவர் அவர்களை அழைக்கும் பொருட்டு, கோபாலபுரம் இல்லம் சென்றிருந்தோம். அன்றைய மாவட்டக் கழகச் செயலாளர் சைதை கா.கிட்டு, எம்.எல்.ஏ., மயிலைப் பகுதிச் செயலாளர் சி.இ.கரிகாலன் ஆகியோருடன் நானும் சென்றிருந்தேன். அப்போது தலைவர் தளபதி அவர்களுடன் எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**- மு.பன்னீர்செல்வம், மாவட்டப் பிரதிநிதி, சென்னை தென்மேற்கு.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### 33 நாட்களில் எழுதிய நூல்!

2002-ஆம் ஆண்டு செப்டம்பர் ஒன்றாம் தேதி, 'தொல்காப்பியப் பூங்கா' நூலை எழுதத் தொடங்கினார் கலைஞர். 532 பக்கங்கள் கொண்ட நூலை, அக்டோபர் 03-ஆம் தேதி எழுதி முடித்தார். 33 நாட்களில் எழுதி முடித்த, அந்த நூல், அதற்கு அடுத்த மாதத்தில் புத்தக மானது. தொல்காப்பியத்தை எளியநடையில் விளக்கிய அந்த நூல், மூன்றே மாதங்களில் எட்டுப் பதிப்புகள் வெளியிடப்பட்டு, விற்பனையில் கிடைத்த ரூ.37 லட்சத்தை கழக அறக்கட்டளைக்கு வழங்கினார் கலைஞர்.

# 'மைனாரிட்டி' தி.மு.க.

மரு. எஸ்.ஏ.எஸ்.ஹபிசுல்லா

1 புதிய தொடர்




சமீபத்தில், தொலைக்காட்சி விவாத மொன்றில் இந்திய சிறுபான்மையினர், குறிப்பாக இஸ்லாமியர்கள் குறித்து விஷத்தைக் கக்கினார் ஒருவர். அவரது கருத்திற்கு எதிராக நிகழ்ச்சியின் நெறியாளரே வெகுண்டு எழுந்ததைப் பலரும் பார்த்திருப்போம்.

வலதுசாரி போர்வையுடன் கலந்துகொண்ட அந்த நபரின் கருத்து, 1947-ஆம் ஆண்டு சுதந்திர இந்தியா மற்றும் சுதந்திர பாகிஸ்தான் பிரிவினையின் போது நிகழ்ந்த வரலாற்றுச் சம்பவங்களை விமர்சித்தது.

நெறியாளர் மட்டுமல்ல, கலந்து கொண்டவர்களும் அவரின் கருத்தைத் திரும்பப்பெற வேண்டுமென அழுத்தம் கொடுத்தனர். இப்படியான திரிபுவாத கருத்துகள் முழுக்க முழுக்க, நாட்டின் இறையாண்மையைச் சீர்குலைக்கும் என கண்டனக்குரலும் எழுப்பினர்.

இஸ்லாமியர்கள் இந்நாட்டின் குடிமக்கள், அவர்களுக்கும் நாட்டின் அனைத்து உரிமைகளும் உள்ளது என்கிற கருத்தை ஒருமனதாக அழுத்தமாக முன் வைத்தனர் அனைத்து பங்கேற்பாளர்களும். ஆனால், வலதுசாரி என்பவர்களின் குரலோ மத நல்லிணக்கத்துக்கு எதிராக, ஒற்றை மதத்தன்மை கொண்டதாக இருந்தது.

### சமத்துவ சமூகநீதி அரசியல்

அந்த ஒற்றை மதத் தன்மைக்கு எதிராக, தமிழ்நாட்டில் எழும் ஒருமித்த குரல் இன்று நேற்று உருவானது அல்ல. நூறு ஆண்டு கால திராவிட இயக்கம் உருவாக்கிய சிறுபான்மை மக்களின் மீதான அக்கறையினால் எழும்பிய குரல். சமத்துவ சமூகநீதி அரசியலின் விளைவுகளாக உருவானவை எனலாம். திராவிட இயக்கத்தின் தாக்கத்தால் உருவான அரசியல் போக்குதான் தமிழ்நாட்டு மக்களைப் பண்பட்டவர்களாக, பகுத்தறியும் தன்மை கொண்டவர்களாகவும் மாற்றியிருக்கிறது.

இந்திய சுதந்திரத்துக்குப் பின்னர் பல அரசியல் உரிமைகள் மற்றும் சலுகைகள் மறுக்கப்பட்டுவந்த சிறுபான்மையினர் பிரதிநிதித்துவத்துக்காகவும், அவர்களது உரிமைகளுக்காகவும், முஸ்லிம், கிறிஸ்தவ அமைப்புகளுடன் இணைந்து குரல்கொடுத்த இயக்கம் திராவிட இயக்கம். தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் எல்லோருமே சிறுபான்மை மக்களுக்கு இடர் வந்தபோதெல்லாம் அவர்களின் உடன் நின்றவர்கள்.

நம்பிக்கைகள் வேறு வேறாக இருந்தாலும், இனமாக, மொழியாக, மதச்சிறுபான்மையினராக அவர்களுக்கு உரிய இடமளித்து, ஒன்றாகவே இருந்து வருகின்றனர் தமிழ்நாட்டு மக்கள். வெவ்வேறு நம்பிக்கைகள் கொண்ட மக்களின் ஒற்றுமை உறவினை ,பிரிவினை சக்திகள் துண்டாட முயற்சி செய்தாலும், கடந்த நூறு ஆண்டு வரலாற்றில், தமிழ்நாட்டில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மீதான பிரிவினை வெறுப்புப் பிரச்சாரம் எடுபட்டதில்லை.

பல மாநிலங்களில் இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள் மீது பல்வேறு விதமான தாக்குதல்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு என்றென்றைக்கும் அனைத்து மக்களுக்குமான குறிப்பாக, சிறுபான்மை மக்களை அரவணைத்துச் செல்லும் மாநிலமாக உள்ளதை அனைவரும் ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

தமிழ்நாட்டின் எங்கோ ஒரு மூலையில் இருக்கும் பள்ளிவாசலில் அமர்ந்து செல்லும் பிற மத யாத்ரீகர்களைப் பார்க்கலாம். மிகச் சமீபத்தில் சபரிமலை ஐயப்பன் கோயிலுக்குச் சென்றவர்களுக்கு வழியில், இஸ்லாமியர்கள் தங்குமிடம், உணவு வசதிகளை அளித்து, அன்போடு வழியனுப்பியதை அறிந்திருப்போம். 'கோயிலுக்கு சீர்வரிசை' என சுமந்து வந்த இஸ்லாமிய உறவுகளை ஆரத்தழுவிய பிற ஏனைய சமூக உறவுகளையும், நாம் திராவிட நிலம் முழுமைக்கும் காணலாம்.

இப்பண்பினைச் சகித்துக்கொள்ள முடியாத சிலர் பல வகைகளிலும் இந்த ஒற்றுமையைக் குலைக்க முயற்சி செய்து வருகின்றனர். ஆனால், இந்த பண்பாட்டுப் பிணைப்பினை எளிதாக உடைத்துவிட முடியாது. ஏனென்றால், கடந்த 75 ஆண்டுகளில் இந்த ஒற்றுமை அரசியலை மக்கள் மனதில், ஆழ விதைத்துள்ளன திராவிட இயக்கங்கள். குறிப்பாக, திராவிட முன்னேற்றக் கழகம்.

நீதிக்கட்சி தொடங்கி, இன்றைக்கு 'திராவிட மாடல் நாயகர்' நமது முதலமைச்சர் வரையில் தலைவர்கள் முன்னெடுத்துச் செல்லும் 'எல்லோருக்கும் எல்லாம்' என்கிற சமூகநீதிச் சிந்தனையின் மூலம் இந்நிலத்தைப் பண்படுத்தி வந்துள்ளனர்.

### தமிழ்நாட்டு அரசியல் மேடைகள்

திராவிட இயக்கங்களுக்கும் இஸ்லாமிய, கிறிஸ்தவ சமூகங்களுக்குமான உறவென்பது நீடித்து நிற்பது. தந்தை பெரியாரும் ,பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரும் கலந்துகொள்ளாத மிலாது நபி விழாவைப் பார்க்கவே முடியாது. அவர்களின்றி மிலாது விழா நிறைவு பெறாது என்பதையும் அந்த மக்கள் அறிவர். இஸ்லாமியத் தலைவர்களுடன் கலந்துரையாடி அரசியல் பேச மிலாது நபி மேடைகளும் வழியமைத்தன.

இஸ்லாத்தின் சிறப்பைப் பற்றி பேசும்போதே முஸ்லிம்களிடையே நிலவும் மூட நம்பிக்கைகளை சீர்திருத்துவதன் அவசியத்தையும், வலியுறுத்தி வந்தவர்கள்தான் பெரியாரும், அவர் வழிவந்த அண்ணா, முத்தமிழறிஞர் உள்ளிட்ட நம் திராவிடத் தலைவர்களும். இதன் வழியாக இஸ்லாமிய சமூகமும் பகுத்தறிவு -சுயமரியாதை- சமூகநீதி பாதைகளில் பயணித்தன.

> **தமிழ் இஸ்லாமிய, கிறிஸ்தவச் சமூகங்கள் திராவிட இயக்கத்துடன், கழகத்துடன் கொண்டிருக்கும் அந்த நம்பிக்கையை உறவின் ஆழத்தை இன்னும் நெருக்கமாக உணர வைக்கும் முயற்சிதான் இந்தத் தொடர்.**

"என்னை உருவாக்கியதில் தந்தை பெரியார் நடத்திய 'குடி அரசு' இதழைப் போலவே 'தாருல் இஸ்லாம்' என்கிற இதழுக்கும் முக்கிய பங்கு உள்ளது" என தலைவர் கலைஞரே பதிவு செய்திருக்கிறார். 'தாருல் இஸ்லாம்' இதழை நடத்தி வந்த நூருல் ஷா, திருக்குர் ஆனை அரபியில் இருந்து தமிழில் மொழிபெயர்க்க முயற்சித்தவர். தமிழ்நாடு பள்ளி வாசல்களில் தொழுகைக்குப் பின்னரான வழிபாட்டைத் தமிழ் முஸ்லிம்களுக்கு புரியும் வகையில் தமிழில் நடத்த வேண்டும் என இஸ்லாமிய சமூகத்திடையே சீர்திருத்தத்தில் ஈடுபட்டவர்.

### கலைஞரின் தோழர்கள்

கலைஞரின் வரலாற்றில் கருணை ஜமால் அவர்களை எழுதாமல் விட முடியாது. அதுபோல கலைஞரை சேலம் மாடர்ன் தியேட்டருக்குப் பரிந்துரை செய்து அனுப்பி வைத்தவர் கவிஞர் கா.மு.ஷெரிப். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் முன்னணியில் நின்றவர் கண்ணியத்திற்குரிய காயிதே மில்லத் அவர்கள். தமிழைத் தேசிய மொழியாக்க அரசியல் நிர்ணய சட்ட சபையில் அவர் முன்வைத்த நிகழ்வு கழகத்துக்கும் முஸ்லிம்களுக்குமான உறவைச் சொல்பவை.

கழகத்தின் தூண்களாக இருந்த சிறுபான்மைச் சமூகத்தில் இருந்து வந்த தலைவர்களின் கழகப்பிணைப்பைச் சொல்வதன் மூலம் சிறுபான்மை மக்கள் இணைந்து பயணிக்க வேண்டிய அரசியல் இயக்கமாக கழகமே உள்ளது என்பதையும் புரிந்து கொள்ள முடியும். பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் இருவரோடும் கழகத்தின் தொடக்க காலத்தில் இருந்தே இணைந்து பயணித்தவர் கழகத்தின் போர்க்குரல் நாகூர் ஹனீபா.

கலைஞர் முதலமைச்சரானபோது அவர் வகித்து வந்த பொதுப் பணித்துறையையும், கழகத்தின் பொருளாளர் பொறுப்பையும் சாதிக் பாட்சாவிடம் ஒப்படைத்தார். இடி,மின்னல் மழை எனப் போற்றப்பட்டவர்களில் ஒருவர் ரகுமான்கான். இப்படி திராவிட இயக்க அரசியலை ஏற்றுக்கொண்டு பயணித்த சிறுபான்மையினத் தலைவர்கள் என்றும் நம் பெருமைக்குரியவர்கள். தமிழ்நாட்டில் திராவிடம் என்கிற கருத்தாக்கம் அவர்களையும் உள்ளடக்கியதுதான்

இந்திய ஜனநாயகத்தில் இஸ்லாமிய கிறிஸ்தவ மக்களுக்கு எப்போதெல்லாம் இடர் வந்ததோ, அப்போதெல்லாம் முதலில் குரல் கொடுத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர்தான்.

கண்ணியமிகு காயிதே மில்லத் மறைவதற்கு முன், கலைஞரின் கைகளைப் பற்றி "இந்த சமுதாயத்தை நீங்கள் பார்த்துக் கொள்வீர்கள் என்கிற நம்பிக்கையுடன் கண் மூடுகிறேன்" என்றார். ஆம், அந்த நம்பிக்கையைத் தமிழ் இஸ்லாமிய, கிறிஸ்தவச் சமூகங்கள் திராவிட இயக்கத்துடன், கழகத்துடன் கொண்டிருக்கும் அந்த நம்பிக்கையை உறவின் ஆழத்தை இன்னும் நெருக்கமாக உணர வைக்கும் முயற்சிதான் இந்தத் தொடர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131